29th January 1972]

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) & (இ) இல்லை. எனினும் இந்திய அரசு கிராமப்புறங்களில் வீட்டு மனை இல்லாத தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்க ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 100 சதவீதம் மானியமாக, மாநில திட்ட வரம் பிறகு புறம்பாக, மாநிலங்களுக்கு சில நிபந்தனையின்கீழ் வழங்கும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, மாநில அரசு கிராமப்புற வீடு கட்டும் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: மாநில அரசுதான் இந்தக் கிராமப்புறங் களுக்கான திட்டத்தை வரைமுறையாகச் செய்து வருகிறது. மத்திய அரசு உதவியும் வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத் தில் அந்தந்தக் கிராமத்தில் எவ்வளவு ரூபாய் அதிகபட்சம் ஒரு வீட்டுக்குச் செலவழிக்க வேண்டியிருக்கும்?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: இந்தத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங் களில் வீடு, வீட்டுமனை இல்லாத ஒருவருக்கு வீட்டு மனைக்கு 100 சத விகிதம் மானியமாகத் தந்து இலவசமாக வழங்கலாம் என்று மத்திய அரசுத் திட்டம் சொல்லியிருக்கிறது. 100 சதுர கெஜத்திற்கும் அதிகமில்லாத அளவு நிலம் தருவதாகவும் அதற்கு ரூ. 150 வரையிலும் செலவு செய்யலாம் என்றும் அந்தத் திட்டத்தில் குறித்திருக்கிறார்கள்.

South Madras Neighbourhood Scheme

* 65 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Backward Classes, be pleased to state—

(*a*) whether it is a fact that compensation has not yet been paid to owners, from whom lands were acquired in the year 1962, for the South Madras Neighbourhood Scheme;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

தென் சென்னை புறநகர் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் சென்னை புறநகர் திட்டத்திற்காக 1962-ஆம் ஆண்டு கையகப் படுத்தப்பட்ட நிலங்களின் சொந்தக்காரருக்கு இழப்பீட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, புறநகர்த் திட்டத்தில் 1962-ல் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் உள்ளவர்கள் பலருக்கு இன்னும் பணம் கிடைக்கவில்லை, செங்கற்பட்டு சப்-கோர்ட்டில் அவை வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: நிலத்திற்குத் தரப்படவேண்டிய தொகையை சர்க்கார் கோர்ட்டில் செலுத்திவிட்டது. ரெவின்யூ டெபாசிட்டில் வைத்து அதன் மூலமாக நிலச் சொந்தக்காரர்கள் பெற்றுவிட்டார்கள். நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலம் தங்களுக்கு எந்த முறையில் உரிமையுள்ளது என்பதை நீதி மன்றத்திற்கு வந்து நிரூபித்துத்தான் நில ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கும் எங்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: இழப்பீட்டுத் தொகை எவ்வளவு ரூபாய் அரசு செலுத்தியிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: இழப்பீட்டுத் தொகை 5 சதவிகிதம் சராசரி விலையில் மதிப்பிட வேண்டுமென்றும் சொலேஷியம் சராசரி 5 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்றும் நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த விஷயம் கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: அந்த நிலங்களை ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடுவதால், நிலத்திற்கான தொகை ரெவின்யூ டெபாசிட்டிலும் கோர்ட்டிலும் கட்டப்பட்டது. கோர்ட் மூலமாகப் பெற்றுக் கொள்கிறார்கள்.

Government High School, Paganeri

* @ 5 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Education and Local Admministration be pleased to state whether it is a fact that the electric motor pump-set purchased for the use of Government High School, Paganeri, Ramanathapuram District, has been kept idle for the last six years for want of power connection?

பாகனேரி அரசினர் உயர்நிலைப் பள்ளி

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இராமநாதபுரம் மாவட்டம் பாகனேரி அரசினர் உயர்நிலைப் பள்ளி உபயோகத்திற்கு வாங்கிய, மின்சார தண்ணீர் இறைக்கும் சாதனம் (Electric Motor Pump) மின் இணைப்பு இல்லாத காரணத்தால் கடந்த 6 ஆண்டுகளாக உபயோகமற்று இருப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம், மின் இணைப்பு வசதியைச் செய்து தர நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டுவிட்டது.

@ Postponed from the list of questions for 24th January 1972.